**தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 57,441,349 கிரயமான நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக மீள் மதிப்பீட்டு அறிக்கை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைத்தன் பின்னர் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பதிவேடொன்று தயாரிக்கப்படுவதுடன் மேலும் பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை ஆராய்ச்சி செயற்திட்ட | புவி வெப்பத்திலிருந்து மின் உற்பத்தி செய்யும் | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி |

| | | | |
|---|---|---|---|
| | மொன்றுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,097,477 ஆன செலவினம் கற்பனை சொத்துக்களுக்காக இனங்காணப்படாமல் நூலகப் புத்தகங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி செயற்திட்டம் நூலகப் புத்தகங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | கிரயத்தை கணக்கீடு செய்வதற்குரிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.**

கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) சட்டங்கள்** | | | |
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | 2019 ஆம் ஆண்டின் இறுதி ஆண்டறிக்கை மற்றும் மீளாய்வாண்டின் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வு திகதியான 2021 மார்ச் மாதம் வரை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் ஆளுகை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அத்துடன் மிக விரைவில் அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | நிதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| i நிதிப்பிரமாணம் 756 | ஒவ்வொரு ஆண்டிலும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்தின் நூலகத்தில் 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இதற்காக குழுவொன்று நியமனம் செய்யப் பட்டுள்ளதாகவும் குழுவின் மூலம் நூலகத்தின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii நிதிப்பிரமாணம் 756(2) | நிறுவகத்தின் 2019 ஆம் ஆண்டின் பொருள் கணிப்பீட்டுச் செயற் பாடுகள் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்காத வகையில் களஞ்சியக் காப்பாளர் | இதன் பின்னர் பொருள் மெய்மையாய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளும் போது தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்திற்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உட்பட நிறுவகத்தின் 06 உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேலதிகமாக வேறு அரச நிறுவனமொன்றின் உத்தியோகத்தர்களையும் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு குறித்துக் கொண்டுள்ளது | |

(இ) சுற்றறிக்கை

----------------------

| | | | |
|---|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 1,073,884,363 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | Covid 19 தொற்று நிலைமை நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு அறிக்கை கிடைப்பதில் தாமதமானமையால் அம்மீள்மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் குறித்த புதிய பெறுமதிகளை உள்ளடக்கி நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பராமரப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---------------------------

### நிதி விளைவுகள்

---------------------------------

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 65,293,445 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 79,413,103 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 14,119,658 ஆன அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. இவ்வதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியங்கள் மற்றும் ஏனைய வருமானம் அதிகரித்தமை மற்றும் வழங்கல், நுகர்வு மற்றும் பராமரிப்பு செலவினம் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்திற்கு 14 ஏக்கர், 2 ரூட், 17.5 பேர்ச் பரப்பளவிலான காணி ஹந்தான தோட்டத்திற்குரிய காணியிலிருந்து மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையால் 1990 யூன் 08 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதும் அதன் சட்டரீதியான உடமையை பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி | 1990 யூன் மாதம் 30 ஆந் திகதி வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் இக்காணியின் உரித்து தொடர்பாக ஆவணமொன்று மாத்திரம் வழங்கப் பட்டுள்ளதாகவும் 2021 | காணியின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மார்ச் 20 ஆந் திகதி நடைபெற்ற ஆளுகை சபை கூட்டத்திற்கு இப்பிரச்சினை முன்வைக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு எமது நிறுவக சட்டத்தரணி ஒருவருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்தினால் தேசிய சேமிப்பு வங்கியில் பேணிச்செல்லப்படும் ரூபா 125,571,722 பெறுமதியான 24 நிலையான வைப்புக்கள் முதிர்வடையும் போது ஏனைய வங்கிகளிடமிருந்து கூறுவிலை கோராமல் அவ்வங்கியிலேயே முதலீடு செய்யப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டின் போது தேசிய வங்கி, மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றிடமிருந்து வட்டி விகிதம் கூறுவிலை கோரப் பட்டிருந்ததாகவும் எனினும் எதிர்காலத்தில் அரசின் ஏனைய வங்கிகளிலிருந்தும் கூறுவிலைகளை பரீட்சிப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக. | கூறுவிலை கோரி மிகவும் பொருளாதார நன்மைகள் கிடைக்கக்கூடிய வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டினுள் செயற்படுத்து வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 566.6 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியான 5 ஆராய்ச்சி செயற்திட்ட முன்மொழிவுகள் விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சின் அங்கீகாரம் கிடைக்காமையால் செயற்படுத்தப்படாமல் இருந்தன. | ஆராய்ச்சி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக எவ்வித பொறுப்பேற்றலும் கிடைக்கவில்லை. "Kandy Lake Protection to Ensure its Natural Beauty and Cultural Wealth" இற்காக திருத்திய செயற்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்கும் இதுவரை பொறுப்பேற்றல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | குறித்த அங்கீகாரத்தைப் பெற்று செயற் திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்தினால் செயற்படுத்தப்பட்ட 03 செயற் திட்டங்களுக்காக மீளாய்வாண்டு இறுதி வரை உரிய ஆக்கஉரிமைகள் (Patents) பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 02 செயற்திட்டங் களுக்காக மாத்திரம் ஆக்கஉரிமைகள் (Patents) பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | ஆக்கஉரிமைகள் (Patents) பத்திரங்களை பெற்றுக்கொள்வது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்திற்காக Intergrated Software முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2016 மார்ச் 28 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் குறித்த முறைமையை நிறுவாமை காரணமாக மீண்டும் 2018 மார்ச் 26 ஆந் திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது, நிறுவகத்தினால் ரூபா 660,000 ஆன முற்பணமொன்றும் ரூபா 6,864,960 தொகை கணனிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அம் முறைமை ஸ்தாபிப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 பெப்ரவரி 20 ஆந் திகதி நடைபெற்ற ஆளுகை சபை கூட்டத்தின் போது எதிர்வரும் 03 மாதங்களுக்குள் இம்முறைமையின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 2020 திசெம்பர் 20 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தின் போது கலந்துரையாடிய பிரகாரம் குறித்த கம்பனி மீண்டும் உடன்படிக்கை மேற்கொள்வதை நிராகரித்திருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் முறைமையின் எஞ்சிய வேலைகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 9.10 பந்தியின் பிரகாரம் பதவியணியினர் முகாமைத்துவத்தின் போது குறுங்காலத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்தின் பதவியணியில் 09 பதவிகளில் 27 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 17 உத்தியோகத்தர்களும் ஆராய்ச்சி | சாரதி / அலுவலக உதவியாளர் பதவிகள் தவிர ஏனைய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த அங்கீகாரம் கிடைத்தவுடன் விரைவில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க விரைவில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பதவியணியினராக இருந்தமையால் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக தாபிக்கப்பட்டுள்ள தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்தின் அடிப்படை நோக்கத்தை அடைந்து கொள்வது சிரமமாக இருந்தது.

## 3.4 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்தில் மீளாய்வாண்டின் இறுதியின் போது 06 குழாம் வாகனங்கள் காணப்பட்டதுடன் அதற்காக இரண்டு சாரதிகள் மாத்திரம் சேவையில் இணைக்கப்பட்டிருந்தனர். ஆதலால் நிறுவகத்தின் நாளாந்த நடவடிக்கைகளை செயற்தறனாக பேணிச் செல்வதற்கு அந்நிலைமை தடையாக இருந்தது. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2010 இன் VIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஆரம்ப வகுப்பு தரத்தின் PL-01) பதவிக்காக தேவையான ஊழியர்களை ஜனாதிபதி பல்நோக்கு செயற்பாட்டு அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்திடமிருந்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அந்த ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவகத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் பதவியணியினரை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகையும் கணக்களிபொறுப்பும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தினால் 03 ஆண்டுகளுக்கு குறையாத காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அத்திட்டத்தை மீளாய்வு செய்து முகாமைத்துவ சபை அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பமாவதற்கு முன்னர் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, திறைசேரி, | சீராக்கம் செய்வதற்கு தேவையான பதிவுகள் குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்த போதும் அதற்காக பொருத்தமான ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்படா திருந்ததுடன் அக்காலப்பகுதியில் நிறுவகத்தில் எந்தவொரு உள்ளக கணக்காய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்க்கும் செயற்பாடு இறுதிக் கட்டத்தில் உள்ளது. | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொரு வரை ஆட்சேர்ப்பு செய்து உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |

**4.3 பாதீட்டு கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினத்துடன் ஒப்பிடும் போது 02 செலவின விடயங்களில் 88 சதவீதம் முதல் 1158 சதவீதம் வரை அதிகரிப்பொன்றும் 11 செலவின விடயங்களில் 26 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான குறைவொன்றும் அவதானிக்கப்பட்டது. | பாதிடப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அதற்காக விடுவிக்கப்பட்ட பங்களிப்பு குறைந்த மட்டத்தில் இருந்ததால் பாதிடப்பட்ட செலவினத்திற்கு அடைய முடியாதிருந்தது. இதனால் பாதிடப்பட்ட செலவினத்தை விட உள்ளவாறான செலவினம் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தமையால் 11 செலவின விடயங்களில் குறைவொன்று காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமான வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்க இணங்க நடவடிக்கை எடுப்பது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) நிறுவகத்தினால் மீளாய்வாண்டில் 05 செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 22,848,617 ஆன செலவினத்திற்காக பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அந்தச் செலவினம் கடந்த ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டிற்காக செலவிடப்பட்ட மூலதன பங்களிப்பு தொகையிலிருந்து மேற்கொள்ளப் பட்டுள்ளமையால் அச்செலவினம் மாத்திரம் இறுதிக் கணக்குகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அச்செலவினம் மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை. | அனைத்து செலவின விடயங்களும் உள்ளடக்கப்படும் வகையில் பாதீட்டு மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |